ஆண்டு பட்டிகை வழக்கு எண்.116/2025

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 116/2025 | LW- 2 | PW- 3 |
| Name | : செல்வராஜ் ( கண்ணுற்ற சாட்சி) | | |
| Father's/Husband's Name | : சின்னதுரை | | |
| Village | : V.T.பட்டி | | |
| Taluk | : சாணார்பட்டி | | |
| District | : திண்டுக்கல் | | |
| Age | : 51/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of May 2026

( 1 முதல் 8 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது செந்துறை குரும்பபட்டி சாலையில் உள்ள 3337 என்ற எண் கொண்ட டாஸ்மாக் கடையில் விற்பனையாளராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரிகளையும் தெரியும். கடந்த 13.02.2025ம் தேதி இரவு 8.00 மணியளவில் நான் மேற்படி கடையில் வேலை செய்து கொண்டிருந்தபோது ராசு என்பவர் 2 பெட்டி மதுபாட்டில்கள் கேட்டார். நான் மொத்தமாக பெட்டியோடு தரக்கூடாது என்று சொன்னேன். அவ்வாறு கொடுத்தால் எங்களுக்கு பிரச்சனையாகிவிடும் என்று சொன்னேன். பின்னர் ராசு என்பவர் அவரை போலீசாருக்கு போன் செய்து அவருடைய போனை என்னிடம் கொடுத்து பேச சொன்னார். மேற்படி போனில் போலீசார் சுரேஷ் என்பவரிடம் பெட்டியோடு மதுபாட்டில்கள் கேட்ட விபரத்தை சொன்னேன். அதற்கு அவர் என்னிடம் பெட்டியோடு கொடுத்தால் உனக்குதான் பிரச்சனை,

கொடுக்கவேண்டாம் என்று கூறினார். எனக்கு சுகர் என்பதால் என்னுடன் பணிபுரிந்த ஆண்டிவேல் மற்றும் மகேந்திரன் ஆகியோரிடம் ராசுவிடம் பெட்டியோடு சரக்கு கொடுக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டு நான் சாப்பிடுவதற்காக சென்றுவிட்டேன். மீனாட்சி பவன் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது ஆண்டிவேல் என்பவர் எனக்கு போன் செய்து பிரச்சனை நடக்குது வேகமாக வா என்று கூறினார். பின்னர் நான் அங்கிருந்து டாஸ்மாக் கடைக்கு வருவதற்குள் அங்கிருந்த ஆட்கள் போலீசை அடித்துவிட்டதாக ஆண்டிவேல் சொன்னார். நான் சென்றபோது அங்கு யாருமே இல்லை. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. நான் விலக்கிவிடவுமில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. போலீஸ் விசாரணையில் சம்பவத்தன்று அ.சா.1 சுரேஷ் என்பவரிடம் மேற்படி நபர்கள் பிரச்சனை செய்ததை நான் சொன்னேன் என்றும், அதன் பின்னர் அ.சா.1 எதிரிகளிடம் அட்டைப் பெட்டியுடன் மதுபாட்டில்கள் கேட்டு பிரச்சனை செய்யாதீர்கள் என்று சொன்னபோது மூக்கன் என்பவர் அவரிடம் வாக்குவாதம் செய்து அவரை அசிங்கமாக பேசி, நீ யாருடா என்னை கேட்பதற்கு என்று சொன்னார் என்றால் சரியல்ல. அதற்கு போலீசார் சுரேஷ் அவர்களிடம் மரியாதையாக பேசு என்று சொன்னபோது மூக்கனும், அவருடன் வந்த செந்துறையைச் சேர்ந்த பின்னர் விசாரித்து தெரிந்த குப்பன் மகன் பொன்னர், சுந்தரம் மகன்கள் சக்திவேல் மற்றும் முத்துக்கிருஷ்ணன், சேகர் மகன் அழகுராஜா, சின்னாண்டி மகன் ராசு, ஆண்டி மகன் துரையன் ஆகிய அனைவரும் சேர்ந்து ரோந்து காவலர் சுரேசை அசிங்கமாக தரக்குறைவாக திட்டிக்கொண்டே அனைவரும் கையால் மாறி மாறி அடித்தார்கள் என்றால் சரியல்ல. பொன்னரும் சக்திவேலும் அருகில் இருந்த கடை விளம்பரப்

பலகையை எடுத்து அ.சா.1ன் உடம்பிலும், கையிலும் அடித்தபோது அதை பார்த்த நானும், அருகில் இருந்தவர்களும் அவர்களை சத்தம் போட்டு விலக்கிவிட்டபோது அவர்கள் அனைவரும் அ.சா.1ஐப் பார்த்து எங்ககிட்ட வச்சுக்கிட்டா உன்னை இங்கேயே கொன்னு புதைச்சுடுவோம் என கொலை மிரட்டல் செய்துவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதால் உண்மையை மறைத்து சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், விலக்கிவிடவில்லை என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>1 முதல் 5 மற்றும் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

3. ஆஜர் எதிரிகளை கடைக்கு வந்து மதுபானம் வாங்கி நுகரும் விதத்தில்தான் தெரியும் என்றாலும், வேறு வகையில் தெரியாது என்றாலும் சரிதான். எதிரிகளில் ஒரு சில நபர்களின் பெயர் தெரியும்.

<u>6, 7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

4. நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் 2, 3 நாட்கள் கழித்து என்னை நேரில் வந்து விசாரித்தாரா என்றால் இல்லை. சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை நேரில் விசாரிக்கவில்லை என்றால் சரிதான், போனில் விசாரித்தார். 14.02.2025ம் தேதி என்னை விசாரித்ததாக சார்பு ஆய்வாளர் தாக்கல் செய்துள்ள வாக்குமூலம் குறித்து தெரியுமா என்றால் அதை வாட்ஸ் அப்பில் எனக்கு அனுப்பி வைத்தார். சார்பு ஆய்வாளர் என்னை சம்பவம் நடந்த அன்றைய தினமே 13.02.2025ம் தேதி இரவு சுமார் 10.00 மணியளவில் போனில் தொடர்பு கொண்டு பேசினார். சம்பவ தினத்தன்று மூக்கன் என்பவரும், அவருடன் வந்தவர்களும் அதிகமான எண்ணிக்கையில் மதுபாட்டில்களை அட்டைப் பெட்டியுடன் தருமாறு பிரச்சனை செய்ததாக போலீசார் விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் போலீசார் சுரேஷ் என்பவரிடம் எத்தனை மணிக்கு பேசினோம் என்றால் 8.00 மணிக்கு சாப்பிடுவதற்கு முன்பு பேசினேன். போலீசார் சுரேஷ் என்னிடம் பேசும்போது கடைக்கு வருவதாக சொன்னாரா என்றால் இல்லை, பெட்டியுடன் தராதே என்று மட்டும்தான் சொன்னார், சத்தமாக இருந்ததால் அதற்கு பின்னர் என்ன பேசினார் என்று கேட்கவில்லை.

5. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் மேற்படி கடையில் சுமார் 3 1/2 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். கடைக்கு முன்புறம் உள்ள சாலை கிழமேல் சாலை ஆகும். எனது கடைக்கு முன்பாக தெருவிளக்கு இல்லை என்றால் சரிதான். அருகில் ஜவுளிக்கடை உள்ளது, அதன் வெளிச்சம் தெரியும். நான் பணிபுரியும் கடைக்குள் சிசிடிவி கேமிரா உள்ளதா என்றால் உள்ளது. சார்பு ஆய்வாளர் மேற்படி சிசிடிவி கேமிரா பதிவுகளை பார்வையிட்டாரா என்றால் அதுபற்றி தெரியாது. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எனக்கும், மூக்கனுக்கும், ராசுவுக்கும் இடையே உள்ள முன் விரோதம் காரணமாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ராசு மற்றும் மூக்கன் என்னிடம் வந்து அட்டைப்பெட்டியுடன் அதிக மதுபாட்டில்கள் வேண்டும் என்று கேட்கவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.05.12 13:48:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 116/2025 | LW- 3 | PW- 4 |
| Name | | : பாஸ்கரன் ( கண்ணுற்ற சாட்சி) | |
| Father's/Husband's Name | | : பெருமாள் | |
| Village | | : கருத்தநாயக்கம்பட்டி | |
| Taluk | | : நத்தம் | |
| District | | : திண்டுக்கல் | |
| Age | | : 43/2026 | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of May 2026

( 1 முதல் 8 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வந்து டீக்கடை நடத்தி வருகிறேன். செந்துறை குரும்பபட்டி சாலையில் உள்ள டாஸ்மாக் கடையின் எதிர் திசையில் நான் டீக்கடை நடத்தி வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரிகளையும் தெரியும். கடந்த 13.02.2025ம் தேதி இரவு சுமார் 8.00 மணியளவில் நான் எனது டீ கடையில் வேலை செய்து கொண்டிருந்தபோது எதிர் திசையில் உள்ள மதுபானக் கடையில் சத்தமாக இருந்தது. நான் சென்று பார்த்தபோது நத்தம் காவல் நிலைய போலீஸ் சுரேஷ்குமாருடன் கூட்டமாக இருந்த ஆட்கள் தள்ளுமுள்ளு செய்து கொண்டிருந்தார்கள். அவர்களை நான் விலக்கிவிடுவதில் கவனமாக இருந்ததால் அவர்களை நான் சரியாக பார்க்கவில்லை. போலீசார் என்னை மறுநாள் விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. போலீஸ் விசாரணையில் சம்பவத்தன்று அ.சா.1ஐ ஆஜர் எதிரிகள் அனைவரும் அசிங்கமாக பேசி கையால் மாறி மாறி அடித்ததாகவும், அவர்களில் பொன்னர் மற்றும் சக்திவேல் இருவரும் அருகில் இருந்த கடையின் விளம்பர பலகையை எடுத்து அ.சா.1ன் உடம்பிலும், கையிலும் அடித்ததை பார்த்த நானும், அருகில் இருந்த டாஸ்மாக் கடையில் வேலை செய்யும் ஆண்டிவேல் மற்றும் மகேந்திரன் அவர்களுடன் சிக்கன் கடை நடத்தி வரும் மணிகண்டன் என்பவரும் சேர்ந்து விலக்கிவிட்டபோது அ.சா.1ஐப் பார்த்து எதிரிகள் அனைவரும் எங்ககிட்ட வச்சுக்கிட்டா உன்னை இங்கேயே கொன்னு புதைச்சிடுவோம் என்று கொலை மிரட்டல் செய்துவிட்டு சென்றதாகவும், காவல் சுரேஷ்க்கு உடம்பில் உள்காயம் ஏற்பட்டு வலி அதிகமாக இருப்பதாக சொன்னதால் அவரை ஒரு போக்குவண்டியின் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதால் உண்மையை மறைத்து எதிரிகளை பார்க்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**1 முதல் 5 மற்றும் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

3. ஆஜர் எதிரிகளை ஒரே ஊர்க்காரர்கள் என்ற வகையில் தெரியும் என்றால் சரிதான். எல்லா எதிரிகளின் பெயர் தெரியாது என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் ஏற்படவில்லை என்றாலும், நான் விலக்கிவிடவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>6, 7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

**4. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் ஏற்படவில்லை என்றாலும், நான் விலக்கிவிடவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.**

**மறு விசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.05.12 13:48:51 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்